**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

O.S.No.183/2024 நாள்-06.04.2026

**வா.சா.1. பாஸ்கர்**

**குறுக்கு விசாரணை 2, 3 பிரதிவாதிகள் தரப்பில்**

நான் என்ன வேலை பார்த்து வந்தேன் என்று பிராதிலும், நிரூபணவாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். நான் 17 வருடம் இந்திய இராணுவத்திலும், ஓமன் நாட்டில் 15 வருடங்களும் பணிபுரிந்தேன். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் இந்திய இராணுவத்திலும், வெளிநாட்டிலும் பணிபுரிந்து வந்ததால் என்னுடைய பண வரவு செலவுகள் எனது வங்கி கணக்கு மூலம் தான் நடந்தது என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.1042/2024 வழக்கும், ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.19/2023, 21/2023 ஆகிய வழக்குகளை கடனுறுதிசீட்டு அடிப்படையில் தொகை கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 4 வழக்குகளின் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கும் , அவரது கணவருக்கும் நான் கடன் கொடுத்ததாக சொல்லும் தொகை ரூ.30 லட்சம் என்றால் சரிதான். அ.வ.எண்.21/2023, 19/2023, 1042/2024 ஆகிய வழக்குகளில் தாக்கல் செய்யப்பட்ட கடனுறுதிசீட்டின் சான்றிட்ட நகல் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான் அது **பி.வா.சா.ஆ.1 முதல் 6 வரை கு**றியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.1 முதல் 6 வரையான ஆவணங்களில் 08.11.2021 அன்று முதன்முதலில் கடன் கொடுத்ததாகவும், 15.07.2022 ல் கடைசியாக கடன் கொடுத்ததாகவும் உள்ளது என்றால் சரிதான். எனக்கு ஸ்டேட் பேங்க் மற்றும் சிண்டிகேட் வங்கியில் கணக்கு உள்ளது நான் ஆரம்பத்திலிருந்தே வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் இல்லை ஆனால் வருமான வரி கணக்கு உள்ளது. 08.11.2021 முதல் 15.07.2022 வரையிலான 9 மாத காலக்கட்டத்தில் எனக்கு ரூ.30 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு வருமானம் இருந்தது என்று காட்டுவதற்கு என்னுடைய வங்கி கணக்கை பார்த்தால் தெரிய வரும் என்றால் சரிதான் என் வங்கி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. 1ம் பிரதிவாதியும் அவரது கணவரும் என்ன தொழில் செய்து வந்தார்கள் என்று பிராது மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியும் அவரது கணவரும் வியாபாரம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்ததாக கூறினார்கள் அவர்களுக்கு மாத வருமானம் என்ன வந்தது என்று எனக்கு தெரியாது. என்னுடைய வழக்குபடி 08.11.2021 அன்று வாங்கிய கடன் தொகைக்கு கடன் வாங்கிய தேதியிலிருந்து வட்டி

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு வட்டி கொடுக்காத நபர்களுக்கு எதன் அடிப்படையில் கடன் கொடுத்தேன் என்ற விவரத்தை என் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே ஒரு நபர் கடன் பெற்று வட்டி கொடுக்காத பட்சத்தில் அந்த நபருக்கு மீண்டும் கடன் கொடுக்க மாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. 4 புரோநோட்களும் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. ரூ.30 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமானமோ, வசதி வாய்ப்போ இல்லை என்றும் ரூ.30 லட்சம் கடன் வாங்க வேண்டிய அவசியம் பிரதிவாதிகளுக்கு இல்லை என்றால் சரியல்ல. 4 புரோநோட்களும் ஒரே நபர் தான் எழுதினார் என்றால் சரிதான் ஒரே நபர் தான் 4 கடனுறுதிசீட்டுகளிலும் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். சாட்சி அழகர் ராஜா என் மனைவியின் தகப்பனார். கடனுறுதிசீட்டை எழுதியவர் என் நண்பர். நான் அழைத்ததன் பெயரில் தான் சாட்சி கடனுறுதிசீட்டை எழுதினார் என்றால் சரிதான். 4 கடனுறுதிசீட்டுகளிலும் தொகை விவரங்களை 1ம் பிரதிவாதியும் அவரது கணவரும் எழுதினார்கள் மற்ற விவரங்களை அவர்கள் முன்பாக சாட்சிகள் எழுதினார்கள். வா.சா.ஆ.1- கடனுறுதிசீட்டில் சாட்சியின் கையொப்பத்தில் உள்ள மையும் மற்ற விவரத்தில் உள்ள மையும் வேறுவேறானவை என்றால் சாட்சி அவரது பேனாவை வைத்து எழுதினார். 4 புரோநோட்டுகளும் ஒரே நேரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் இல்லை. 4 கடனுறுதிசீட்டுகளும் ஒரே நேரத்தில் 1ம் பிரதிவாதியின் கணவர் இறந்த பின்பு எழுதப்பட்டது என்றால் சரியல்ல. என்னை போன்று என் உறவினர்கள் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் தற்போது தான் எனக்கு தெரிய வந்தது. நான் உள்ளூரில் 2020ம் ஆண்டிற்கு பிறகு தான் குடியிருந்து வருகிறேன். பிரதிவாதிகள் என் உறவினர்கள் இல்லை என்றால் சரிதான் எனக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்யவில்லை. ரூ.30 லட்சம் கடன் வாங்க வேண்டிய அளவிற்கு 1ம் பிரதிவாதியும் அவரது கணவரும் என்ன தொழில் செய்து வந்தார்கள் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதியோ அவரது கணவரோ வா.சா.ஆ.1 மற்றும் மற்ற வழக்குகளில் கண்ட புரோநோட்டுகளை எனக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்றும் 1ம் பிரதிவாதியின் கணவர் இறந்த பின்பு சொத்துக்கள் அதிகமாக இருப்பதை தெரிந்து சொத்துக்களை அபகரிக்க வேண்டி மோசடியாக உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வா.சா.ஆ.1- மோசடியானது என்பதால் அதன் அடிப்படையில் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

2, 3 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையை 1ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக் கொள்வதாக எடுத்துரைக்கப்பட்டது.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,

இராஜபாளையம்.